AETM – 201

II Semester B.Com./B.Com.(LS) Examination, October/Novemer 2022
(NEP)
TAMIL LANGUAGE (Part – I) (Paper – II)

Time : 2½ Hours Max. Marks : 60

SECTION – A

I. அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. (5×1=5)

1) 'நிர்வாகக் கலையைத் தெரிந்து கொள்ளுங்கள்' என்ற நூலின் ஆசிரியர்
   1) ஜெயகாந்தன் 2) பி.சி. கணேசன்
   3) இந்துமதி 4) சுப்பிரமணியன்

2) இவற்றில் எது வினைத்தொகை
   1) விளைநிலம் 2) பவளவாய்
   3) அண்ணன் தம்பி 4) வாழ்க

3) 'பெருங்கதை' எனும் காப்பியத்தின் ஆசிரியர்
   1) குணாட்டியர் 2) கபிலர்
   3) ஔவையார் 4) இளங்கோவடிகள்

4) மரம் என்னும் சொல்
   1) திசைசொல் 2) வடசொல்
   3) திரிசொல் 4) இயற்சொல்

5) கம்பராமாயத்தில் உள்ள மொத்த காண்டங்கள்
   1) 6 2) 3
   3) 4 4) 5

II. எவையேனும் ஐந்திற்கு இடம்சுட்டிப்பொருள் விளக்கம் தருக. (5×3=15)

1) உரத்தகை யாளரும் ஒருங்குவந்து ஈண்டுக
   செருச்செய வலித்தனன் செல்வன்

2) எவ்வழி உறைந்தான் நம்முன் என்றலும் எயினர் வேந்தன்
   இவ்வழி வீரயானே காட்டுவல் எழுக என்றான்

P.T.O.

3) சீரொடு நேர் பொருதும் பொழிலே
செழு வீடொடு சீர்பொருதும்

4) மலைத்துமேல் வந்த மகதவன் படையொடு
தலைப்பெய் தன்றாற் பகைப்படை பரந்தென்

5) ஐவீரும் ஒருவீராய் அகலிடத்தை நெடுங்
காலம் அளித்திர் என்றாள்

6) திட்டமிடும் போது நாம் இப்போது என்ன நிலையில் இருக்கிறோம், எதிர்காலத்தில் என்ன நிலையை அடைய வேண்டும் என்பவையெல்லாம் தெளிவாகிவிடுகின்றன

7) அமெரிக்கர்களைவிடத் துணிந்து முதலீடு செய்வதில் ஜப்பானியர்கள் முன்னிலையில் இருக்கிறார்கள்

8) ஒரு சிறந்த நிர்வாகி தன்னுடைய நேரத்தின் அருமையாகச் சரியாக உணர்ந்த ஒருவரையே தன்னுடைய உதவியாளராக வைத்துக்கொள்வர்

## SECTION – B

III. எவையேனும் ஐந்திற்குச் சுருக்கமான விடை தருக. **(5×4=20)**

1) பகுபத உறுப்புகளை சான்றுடன் விளக்குக.

2) பெயர் சொல்லைச் சான்றுடன் கூறுக.

3) உம்மைத் தொகை, உவமைத்தொகையைச் சான்றுடன் விளக்குக.

4) திசைச்சொல், வடசொல்லினை விளக்கி வரைக.

5) பரதன், சேனையின் சிறப்பினை விளக்குக.

6) வயந்தகன் செயலைக் காட்சிப்படுத்துக.

7) நமது நாட்டு நிறுவனங்களில் காணப்படும் சில அடிப்படை பலகீனங்களைக் குறித்து பி.சி. கணேசன் கூறும் கருத்துகளை விளக்கி வரைக.

8) அமெரிக்காவில் தொழில்துறையில் பெரும் வெற்றி கண்ட ஹென்றி ஃபோர்டின் சிறந்த இயல்புகளை விளக்குக.

## SECTION – C

IV. எவையேனும் நான்கிற்கு விடை தருக. **(4×5=20)**

1) சுமந்திரன், குகனைப் பற்றி பரதனிடம் கூறியவை யாவை ?

2) தருசகன் கேகய மன்னனைப் போர்விடுத்தமைக் குறித்து பெருங்கதை வழிக்காட்சிப்படுத்துக.

3) மருத நிலத்துச் செல்வ வளத்தை தேம்பாவணி வழிநின்று விளக்குக.

4) நிறுவனத்திற்கு தலைமை நிர்வாகப் பொறுப்பிலுள்ளவர்களின் வழி காட்டுதலின் முக்கியத்துவத்தை பி.சி.கணேசன் வழி நின்று விளக்குக.

5) 'மனிதர்களின் நடவடிக்கைகளே நிர்வாகத்தின் வெற்றி தோல்விகளை நிர்ணயிக்கின்றன' என்பதை சீனச் சிந்தனையாளர் கன்ஃபியூஷியஸ் வழி நின்று நிறுவுக.

6) ''மனிதர்கள் தான் நிர்வாகம்'' என்பதை பி.சி. கணேசன் வழிநின்று நிறுவுக.